## சார்பு நீதிமன்றம், அவிநாசி
## M.C.O.P.No. 60/2019

16.08.2022

ம.சா.1 சென்னியப்பன்

குறுக்கு விசாரணை

என்னை மருத்துவமனைக்கு அனுமதிக்க எதிர்மனுதாரர்கள் தான் உதவினார்கள் என்றால் சரியல்ல. 108 ஆம்புலன்ஸ் உதவியுடன் நான் மருத்துவமனையில் சேர்ந்தேன். காவல் நிலையத்தில் என் தம்பி மகன் செல்வம் என்பவர் தான் புகார் கொடுத்துள்ளார். என் மகன் நாகமுத்து புகார் கொடுக்கவில்லை. என் தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் பற்றிய விபரம் எனக்கு தெரியுமா ? என்றால் எனக்கு தெரியாது வழக்கறிஞருக்கு தான் தெரியும். வழக்கில் தாக்கல் செய்துள்ள மாதிரி வரைபடத்தில் குறிப்பிட்டவாறு பார்த்தால் என்னுடைய தவறால் தான் விபத்து நடந்துள்ளதாக தெரிய வருகிறது என்றால் சாலையின் வடகோட்டில் விபத்து நடந்தது. பெருக்கற்குறி போடப்பட்டுள்ள இடத்தில் தான் விபத்து நடந்தது என்றால் சரிதான். விபத்து சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள். போலீசார் என்னை அச்சுறுத்தவில்லை. என்னை வற்புறுத்தி கையெழுத்து எதுவும் பெறவில்லை. போலீஸ் விசாரணை பற்றி தற்போதைய நிலவரம் எனக்கு தெரியாது. என் மகன்களுக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் விபத்திற்கு முன்பு விவசாயம் செய்ததற்கான ஆதாரம் மற்றும் வருமானம் ஈட்டியதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் விபத்திற்கு முன்பு எந்த வேலைக்கும் செல்லவில்லை என்றாலும், எந்த வருமானமும் ஈட்டவில்லை என்றாலும் சரியல்ல. அதிகமான இழப்பீடு பெறுவதற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து நடைபெற்ற இடத்தில் என் மகன் இல்லை என்றால் சரியல்ல. என்னுடைய தவறுதலால் தான் விபத்து நடைபெற்றது என்பதால் போலீசார் மேல்நடவடிக்கையினை கைவிட்டுவிட்டார்கள் என்றால் தவறு. என்னுடைய தவறால் ஏற்பட்ட விபத்திற்கு எதிர்மனுதாரர் இழப்பீடு தரவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. எனக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான். வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மருத்துவ பில்கள் மிகைப்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

Sd/- சென்னியப்பன்

*Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.*

Sd/- K.Suresh Kumar, B.A., B.L.,

Subordinate Judge,
Avinashi.